S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P. மணிகண்டன் B.Com., 78452 54592
P. பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"


SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 351 13.06.2026 SATURDAY VAIKASI : 30 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 351 13.06.2026 சனிக்கிழமை வைகாசி : 30 விலை : ரூ.5/-

## பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் பாஜ அரசு முக்கியத்துவம்

# "பிரதமர் மோடி பெருமிதம்"

புதுடில்லி: ஜூன்.13-

பெண்கள் தலைமை யிலான வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவதற்காக என்டிஏ அரசு தொடர்ந்து பணியாற்றி வருவதாக பிரதமர் மோடி தெரி வித்துள்ளார்.

அவர் வெளியிட்ட எக்ஸ் தளப்பதிவில்; கடந்த 12 ஆண்டுகளில் என்டிஏ அரசு பெண்கள் தலைமை யிலான வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவதற்காகப் பணியாற்றியுள்ளது. மேலும், இது அனைத்துத் துறைகளிலும் தெளிவாகக் தெரிகிறது. தொழில்முனைவு முதல் கல்வி, சுகாதாரம், துப்புரவு, வீட்டுவசதி, விளையாட்டு, அறிவியல் மற்றும் நிர்வாகம் வரை பல்வேறு



துறைகளில் பெண்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றனர்.

பெண்களின் கண்ணியம், வாய்ப்பு மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவற்றில் என்டிஏ அரசின் செயல்பாடுகள் ஆழமாக வேரூன்றியுள்ளன. இவை அனைத்தும் பெண்கள் தங்களின் முழுத் திறனையும் உணர்ந்து, தேசக் கட்டமைப்பில் இன்னும் வலுவாகப் பங்களிப்பதற்கான ஒரு சூழலை உருவாக்க உதவியுள்ளன.

இந்தியாவின் பெண் சக்தி அறிவியல், விண்வெளி மற்றும் கண்டுபிடிப்பு போன்ற துறைகளில் முத்திரை பதிப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ட்ரோன் தொழில்நுட்பம் போன்ற வளர்ந்து வரும் துறைகளில் அவர்களின் அதிகரித்து வரும் பங்களிப்பு, வாய்ப்புகளுக்கான புதிய வழிகளைத் திறந்து விடுவதோடு, நாடு முழுவதும் உள்ள வளர்ச்சியை மாற்றி அமைக்கிறது, இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## "நிதி ஆயோக் கூட்டத்தில் திமுக சாதனைகள் மீது தவெக ஸ்டிக்கர்" : உதயநிதி கண்டனம்



சென்னை, ஜூன்.13-

"நிதி ஆயோக் கூட்டத்தில் திமுக அரசின் சாதனைகளின் மீது முழுக்க முழுக்க ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறது சோஃபா மாடல் அரசு" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "தேர்தல் பிரச்சாரத்தின் போது, தமிழ்நாடு ஏதோ படுகுழிக்குள் விழுந்தது போலவும், கடனில் தத்தளிப்பதாகவும் போலி கதைகளை (Fake Narratives) உருவாக்கிய இன்றைய முதல்வர், டெல்லியில் நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் சாதனைகள் என்று பெரும் பட்டியலை வாசித்து இருக்கிறார்.

இந்தியாவிலேயே 2 ஆவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு இருக்கிறது. இந்தியாவில் பணிக்குச் செல்லும் பெண்களில் 42 சதவிகிதம் மகளிர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். பெண் கல்வி, பாதுகாப்பு, சுகாதாரம் போன்றவற்றில் முன்னேற்றம், மகளிர் சுய உதவி குழுக்களின் வளர்ச்சி என்று முதல்வர் பேசி இருக்கிறார்.

இவை எல்லாம் அவருடைய ஒரு மாத கால 'சோஃபா மாடல்' ஆட்சியில் நடந்த சாதனைகளா? அல்லது, 5 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் சாதனையா? என்பதை முதல்வர் விளக்க வேண்டும்.

தேர்தலுக்கு முன்பு 'நீட் மட்டும் தான் உலகமா?' என்று கேட்டவர், இப்போது நீட் விலக்கு கேட்டு, அவர் பேசியதற்கு அவரே மறுப்பு கூறி யிருக்கிறார். டெல்லி வரை சென்றவர், நிதி ஆயோக் கூட்டத்திலோ, அல்லது கர்நாடகாவில் ஆட்சி செய்யும் அவருடைய புதிய கூட்டணிக்கட்சி யிடமோ மேகேதாட்டு பிரச்சினை பற்றி வாய் திறக்காமல், நமக்கெதுக்கு வம்பு என்று அமைதியாக திரும்பி இருக்கிறார்.

மொத்தத்தில், நிதி ஆயோக் கூட்டத்தில் நம் கழக அரசின் சாதனைகளின் மீது முழுக்க முழுக்க ஸ்டிக்கர் ஒட்டி யிருக்கிறது சோஃபா மாடல் அரசு. பொய்களையும், அவதூறுகளையும் அள்ளி வீசி, மக்களை ஏமாற்றி, நீங்கள் பெற்றிருக்கும் போலி வெற்றி நீண்ட நாள் நிலைக்காது சி.எம் சார். உண்மை நிச்சயம் வெல்லும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## கொல்லூர் மூகாம்பிகை அம்மன் கோவிலில் முதல்வர் விஜய் வழிபாடு; வெள்ளி வாள் காணிக்கை செலுத்தினார்!

பெங்களூரு: ஜூன்.13-

டில்லி பயணத்தை முடித்து கொண்டு மங்களூரு சென்ற முதல்வர் விஜய், கொல்லூர் மூகாம்பிகை அம்மன் கோவிலில் தரிசனம் செய்தார். அம்மனுக்கு வெள்ளி வாள் காணிக்கையாக செலுத்தினார்.

உடுப்பி மாவட்டம், பைந்துார் தாலுகாவில் உள்ள கொல்லுார் மூகாம்பிகை கோவில், மிகவும் பிரசித்தி பெற்றதாகும். அரசியல்வாதிகள், திரையுலக பிரபலங்கள், தொழிலதிபர்கள் என, தினமும் பல்லா யிரக்கணக்கான பேர் இக்கோவிலில் தரிசனம்



செய்கின்றனர்.

தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர்., மூகாம்பிகையின் தீவிர பக்தர். கோவிலுக்கு தங்கவாள் காணிக்கை செலுத்தியுள்ளார். மற்றொரு முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவும் சாமி தரிசனம் செய்து இருக்கிறார். சமீபத்தில், தமிழக முதல்வர் ஸ்டாலினின் மனைவி துர்காவும், கொல்லூருக்கு வந்து, மூகாம்பிகையை தரிசித்தனர்.

இந்நிலையில், டில்லி பயணம் முடிந்து புறப்பட்ட முதல்வர் விஜய் மங்களூரு விமான நிலையம் சென்றடைந்தார். கொல்லூர் சென்ற அவருக்கு கோவில் சார்பில் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. சாமி தரிசனம் செய்த அவர், சிறப்பு பூஜைகளிலும் பங்கேற்றார். அம்மனுக்கு ஒரு கிலோ 600 கிராம் எடை கொண்ட வெள்ளி வாள் காணிக்கையாக செலுத்தினார். முதல்வர் விஜய் வருகை முன்னிட்டு கோவில் வளாகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

# "20 வருடங்களாக இருளில் ஒரு ஜீவன் மழையில் சிதைந்த கூரை வீடு..!"

## வீடு மற்றும் மின்சார வசதி கிடைக்கும் என MLA உறுதி!

ராதாபுரம், ஜூன்.13:

ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 20 வருடங்களாக வீடு மற்றும் மின்சார வசதி இல்லாமல் அவதிப்பட்டு வரும் பெண்மணியின் அவல நிலையை அறிந்து, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.கே. கிறிஸ்டோபர் மற்றும் தமிழக வெற்றிக் கழகத்தினர் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.



எம்.எல்.ஏ., எஸ்.கே.கிறிஸ்டோபர்

ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டதும், முன்னாள் சபாநாயகர் அப்பாவுவின் சொந்த ஊருமான லெப்பைக் குடியிருப்பைச் சார்ந்தவர் செல்வி (வயது 55). இவருக்குச் சொந்த இடம் இருந்தும், கடந்த 20 வருடங்களாக வீடு மற்றும் மின்சார வசதி கோரி பலமுறை மனு அளித்தும், இதுவரை எவ்வித அடிப்படை வசதிகளும் கிடைக்காமல் அவதிப்பட்டு வந்துள்ளார்.



ஒன்றியச் செயலாளர் நாகராஜன்

இந்நிலையில், தற்போது பெய்து வரும் பலத்த மழை யினால் அவரது கூரை வீடும் முற்றிலும் சேதமடைந்து வசிக்க முடியாத அவசரச் சூழல் ஏற்பட்டுள்ளது. இத்தகவலை அறிந்த சமூக ஆர்வலர் ஒருவர் உடனடியாக ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.கே. கிறிஸ்டோபர் அவர்களைத் தொடர்பு கொண்டு விவரித்தார்.



அப்போது சென்னை தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் உடனான சந்திப்பில் இருந்த சட்டமன்ற உறுப்பினர், இப்பிரச்சினை குறித்து உடனே நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததோடு, வள்ளியூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் நாகராஜனை நேரில் சென்று பார்வையிட உத்தரவிட்டார்.

அதன்படி, தமிழக வெற்றிக் கழக வள்ளியூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் நாகராஜன் பாதிக்கப்பட்ட பெண்மணி செல்வியை நேரில் சந்தித்து அவரது நிறைகுறைகளைக் கேட்டறிந்ததோடு, அவர் எம்எல்ஏ அவர்களிடம் பேசிய வகையில், அவர் உரிய நிவாரணமும் வீடு மற்றும் மின்சார வசதியும் கூடிய விரைவில் கிடைக்க எம்எல்ஏ கிறிஸ்டோபர் உறுதியளித்துள்ளார் என்பதனை அந்தப் பெண்மணி யிடம் தெரிவித்து விட்டு சென்றுள்ளார்.

சக்கர வியூகம் வாய்ஸ்:

இருளில் வாழ்ந்து வருவதும், தற்போதைய மழையால் கூரை வீடும் இடிந்து தவிப்பதும் அதிகார வர்க்கத்தின் உச்சகட்ட அவலத்தையும் மெத்தனப் போக்கையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. சமூக ஆர்வலர் கொடுத்த தகவலின் பேரில், சென்னையில் இருந்துகொண்டே சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.கே. கிறிஸ்டோபர் உடனடியாகத் துரித நடவடிக்கை எடுத்து, தவெக ஒன்றியச் செயலாளர் நாகராஜனை நேரில் அனுப்பி மக்களின் குறைகளைக் கேட்டறியச் செய்தது பாராட்டுக்குரிய முதல் கட்ட நகர்வாகும்.

எனினும், இத்தகைய நேரில் சந்திப்புகளும், ஆறுதல் வார்த்தைகளும் வெறும் அரசியல் விளம்பரமாகவோ அல்லது தற்காலிகச் சமாதானமாகவோ போய்விடக் கூடாது. 20 ஆண்டுகளாகத் தொடரும் இந்த இருண்ட வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், சட்டமன்ற உறுப்பினரும் தவெக நிர்வாகிகளும் அரசிடம் கறாராகப் போராடி, அந்த ஏழைப் பெண்மணிக்கு உடனடியாகத் தொகுப்பு வீடும், இலவச மின்சார இணைப்பும் போர்க்கால அடிப்படையில் பெற்றுத் தந்து தங்களின் மக்கள் பற்றை நிரூபிக்க வேண்டும் என்பதே மனசாட்சி உள்ள இந்த மனித குலத்தின் மாண்பாகும்.

# கோயம்பேடு பேருந்து நிலையத்தை மீண்டும் திறக்க ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை




சென்னை, ஜூன்.13–

“பயணிகள் நலன் கருதி கோயம்பேடு பேருந்து நிலையத்தை மீண்டும் திறக்க வேண்டும்” என, அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தலைமைச் செயலகத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபனை நேற்று சந்தித்த பிறகு, அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் அன்பழகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மிகப் பெரிய பேருந்து நிலையமான கோயம்பேடு பேருந்து நிலையத்தை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்.

இது சென்னை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகவும் உள்ளது. கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில், தற்போது, ஆம்னி பேருந்துகளுக்கான நுழைவுக் கட்டணம் ரூ.150 ஆக உள்ளது. இதை ரூ.500 ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

கட்டணத்தை இவ்வளவு அதிகமாக உயர்த்தக் கூடாது. மேலும், போக்குவரத்துத் துறையின் அனைத்து சேவைகளும் முழுமையாக ஆன்லைன் முறைக்கு மாற்றப்பட வேண்டும்.

இதன்மூலம், இடைத்தரகர்கள் மற்றும் தேவையற்ற தாமதங்களை தவிர்க்க முடியும். குறிப்பாக, வாகனங்களுக்கான சிறப்பு எண் ஒதுக்கீட்டு நடைமுறையை ஆன்லைன் மூலம் செயல்படுத்தியிருப்பதை வரவேற்கிறோம்.

முன்பு சிறப்பு எண் பெற டீலர்கள், ஏஜென்ட்டுகள் உள்ளிட்டோரின் உதவியை நாட வேண்டி இருந்தது. அதற்காக, ரூ.7 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் வரை கூடுதல் செலவாகி வந்தது. தற்போது, எந்த இடைத்தரகரும் இல்லாமல் நேரடியாக விண்ணப்பித்து பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் வெளிப்படைத்தன்மை அதிகரித்துள்ளது. போக்குவரத்துத் துறையில் லஞ்சம் மற்றும் மறைமுக செலவுகள் குறைந்து, சேவைகள் விரைவாகவும், வெளிப்படையாகவும் நடைபெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அனைத்து சேவைகளும் ஆன்லைன் மயமாக்கப்பட்டால் இந்த மாற்றம் மேலும் வலுப்பெறும்.

ஒரு பேருந்தில் பயணிக்க வேண்டிய 40 பேர் தற்போது தனித்தனி கார்கள் அல்லது வாடகை வாகனங்களில் கிளாம்பாக்கம் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால், போக்குவரத்து நெரிசலும், சுற்றுச்சூழல் மாசுபாடும் அதிகரிக்கிறது.

எனவே, கோயம்பேடு பேருந்து நிலையத்தை மீண்டும் திறப்பது அவசியம். ஆம்னி பேருந்து கட்டண நிர்ணயம் தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

ஆம்னி பேருந்துகளுக்கு தனி அனுமதி மற்றும் கட்டண நிர்ணய முறை உருவாக்கப்பட வேண்டும். கட்டண ஒழுங்குமுறையை கொண்டு வர அரசுடன் இணைந்து செயல்பட தயாராக உள்ளோம்.

ஆம்னி பேருந்து சேவைகள் தொடர்பான பல்வேறு கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. அவற்றுக்கு சாதகமான முடிவுகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இவ்வாறு அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் அன்பழகன் கூறிஉள்ளார்.



# “நிதி ஆயோக் கூட்டத்தில் திமுக சாதனைகள் மீது தவெக ஸ்டிக்கர்” உதயநிதி கண்டனம்

சென்னை, ஜூன்.13–

“நிதி ஆயோக் கூட்டத்தில் திமுக அரசின் சாதனைகளின் மீது முழுக்க முழுக்க ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறது சோஃபா மாடல் அரசு” என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “தேர்தல் பிரச்சாரத்தின் போது, தமிழ்நாடு ஏதோ படுகுழிக்குள் விழுந்தது போலவும், கடனில் தத்தளிப்பதாகவும் போலி கதைகளை (Fake Narratives) உருவாக்கிய இன்றைய முதல்வர், டெல்லியில் நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் சாதனைகள் என்று பெரும் பட்டியலை வாசித்து இருக்கிறார்.

இந்தியாவிலேயே 2 ஆவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு இருக்கிறது. இந்தியாவில் பணிக்குச் செல்லும் பெண்களில் 42 சதவிகிதம் மகளிர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். பெண் கல்வி, பாதுகாப்பு, சுகாதாரம் போன்றவற்றில் முன்னேற்றம், மகளிர் சுய உதவி குழுக்களின் வளர்ச்சி என்று முதல்வர் பேசி இருக்கிறார்.

இவை எல்லாம் அவருடைய ஒரு மாத கால ‘சோஃபா மாடல்’ ஆட்சியில் நடந்த சாதனைகளா? அல்லது, 5 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் சாதனையா? என்பதை முதல்வர் விளக்க வேண்டும்.

தேர்தலுக்கு முன்பு ‘நீட் மட்டும் தான் உலகமா?’ என்று கேட்டவர், இப்போது நீட் விலக்கு கேட்டு, அவர் பேசியதற்கு அவரே மறுப்பு கூறியிருக்கிறார். டெல்லி வரை சென்றவர், நிதி ஆயோக் கூட்டத்திலோ, அல்லது கர்நாடகாவில் ஆட்சி செய்யும் அவருடைய புதிய கூட்டணிக்கட்சியிடமோ மேகேதாட்டு பிரச்சினை பற்றி வாய் திறக்காமல், நமக்கெதுக்கு வம்பு என்று அமைதியாக திரும்பி இருக்கிறார்.

மொத்தத்தில், நிதி ஆயோக் கூட்டத்தில் நம் கழக அரசின் சாதனைகளின் மீது முழுக்க முழுக்க ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறது சோஃபா மாடல் அரசு. பொய்களையும், அவதூறுகளையும் அள்ளி வீசி, மக்களை ஏமாற்றி, நீங்கள் பெற்றிருக்கும் போலி வெற்றி நீண்ட நாள் நிலைக்காது சி.எம் சார். உண்மை நிச்சயம் வெல்லும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மேட்டூர் நீர் திறக்காமல் ரூ.134 கோடிக்கு ‘சிறப்பு தொகுப்பு’ என ஏமாற்றுவதா? அரசுக்கு இபிஎஸ் கண்டனம்



சென்னை, ஜூன்.13–

“மேட்டூர் அணையில் இருந்து நீர்த் திறப்பு செய்யாமல், ரூ.134 கோடிக்கு சிறப்பு தொகுப்பு என்ற பெயரில் மற்றுமொரு ஏமாற்று அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டு உள்ளது” என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமுக வலைதளப் பதிவில், “ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12 அன்று திறக்கப்படும் மேட்டூர் அணை நீர், இவ்வாண்டு இன்றைய தினம் திறக்கப்படாததால் விவசாயிகள் பெரும் அதிர்ச்சிக்கும் கவலைக்கும் ஆளாக்கியுள்ளது. குறுவை சாகுபடி மேட்டூர் அணையில் இருந்து காவிரி நீர்த் திறப்பை பெரிதும் நம்பி இருப்பதால், இந்த நீர் வெளியீடு என்பது மிகவும் முக்கியமானது.

ஏற்கெனவே இந்த அரசு, விவசாயப் பயிர்க் கடன் என்ற பெயரில் 10,000 கோடி ரூபாய்க்கும் மேற்பட்டு இருக்கும் கடன் தொகைகளை சொன்னபடி தள்ளுபடி செய்யாமல், கடுகளவுக் கடனை மட்டும் அடைப்பதாக கூறி விவசாயிகளை ஏமாற்றி, அவர்களை போராட்டக் களத்திற்கு தள்ளிவிட்டது. தற்போது நீர்த் திறப்பு செய்யாமல், ரூ.134 கோடிக்கு சிறப்பு தொகுப்பு என்ற பெயரில் மற்றுமொரு ஏமாற்று அறிவிப்பை வெளியிட்டு உள்ளது.

மும்முனை மின்சாரம் ஏற்கனவே விவசாயிகளுக்கு 24 மணி நேரம் அஇஅதிமுக அரசின் அறிவிப்பின்படி வழங்கப்பட்டு வருகிறது. அதை தற்போது 18 மணி நேரமாக குறைத்து அறிவித்துள்ளது அரசு.

ஏற்கனவே அறிவிக்கப்படாத மின்வெட்டால் மாநிலம் முழுக்க மின்சாரம் இல்லாததால் பம்பு செட்டுகள் இயக்க முடியாத நிலை வேறு உள்ளது. இந்நிலையில், விவசாயிகளின் வலிகளை, வேதனைகளை கொஞ்சம் கூட புரியாமல் இன்றைய பொய்க்கால் குதிரை அரசு ஒரு வெற்று ஏமாற்று அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

விவசாயிகள் வாழ்வாதாரம் சம்மந்தப்பட்ட விஷயமான இதன் தீவிரத்தை உணர்ந்து, மேட்டூர் அணையில் இருந்து நீர் திறந்து கடைமடை வரை சென்றடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என இந்த அரசை வலியுறுத்துகிறோம்,” என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# தொடர் மின்வெட்டால் விவசாயம் பாதிப்பு: அரசு உடனடி நடவடிக்கை எடுக்க தேமுதிக வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.13–

“விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட கடன் தள்ளுபடி முழுமையாக செயல்படுத்தப்படாதது ஒரு புறம்; மின்வெட்டால் பாதிக்கப்படுவது மறுபுறம் என்று விவசாயிகளின் நிலைமை பரிதாபமாக மாறியுள்ளது. எனவே, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்” என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: கடலூர் மாவட்டம், விருத்தாசலம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தொடர்ச்சியாக நிலவி வரும் மின்வெட்டு விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு போதிய நீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக பயிர்கள் வாடியதால் விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்பையும் வேதனையையும் சந்தித்து வருகின்றனர்.

விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட கடன் தள்ளுபடி முழுமையாக செயல்படுத்தப்படாதது ஒரு புறம்; மின்வெட்டால் பாதிக்கப்படுவது மறுபுறம். “உரலுக்கு ஒரு விவசாயிகள் பக்கம் இடி மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி” என்பது போல் விவசாயிகளின் நிலைமை பரிதாபமாக மாறியுள்ளது. எனவே, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

தமிழகத்தில் 14.23 லட்சம் விவசாயிகள் பயன்பெறும் விதமாக பயிர்க் கடனில் ரூ. 2,044 கோடியை தள்ளுபடி செய்திருக்கிறது தவெக அரசு. ஆனால், தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடி விஜய் செய்யவில்லையே என விவசாயிகளும் விவசாய சங்கங்களும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், தொடர்ச்சியாக நிலவி வரும் மின்வெட்டு விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு போதிய நீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக பொருளாதார இழப்பை எதிர்கொண்டுள்ளனர்.



► ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவுப்படி ஈரோடு மாநகராட்சி வெண்டிபாளையம் குப்பைக் கிடங்கில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப்பொருட்களை தடையை மீறி விற்பனை செய்யும் கடைகளை கூட்டாய்வு மேற்கொண்டதை தொடர்ந்து கைப்பற்ற பொருட்களை மாவட்ட நியமன அலுவலர் அவர்கள் தலைமையிலான குழுவினரால் அழிக்கப்பட்ட போது எடுத்த புகைப்படம்.



# வரலாறு படைத்த எழும்பூர் ரயில் நிலையம்: 118 ஆண்டுகள் நிறைவு

சென்னை, ஜூன்.13–

தென்னிந்தியாவின் முக்கிய ரயில் முனையங்களில் ஒன்றான சென்னை எழும்பூர் ரயில் நிலையம், தனது சேவையைத் தொடங்கி 118வது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. தென் தமிழகத்திற்கான முக்கிய நுழைவாயிலாக விளங்கி வரும் இந்த ரயில் நிலையம், இந்திய ரயில்வேயின் பாரம்பரியம் மற்றும் கட்டிடக்கலைச் சிறப்பின் அடையாளமாகத் திகழ்கிறது. இதனையடுத்து 1905 செப்டம்பரில் தொடங்கப்பட்டு, முழு முனையக் கட்டிடம் ஜூன் 11, 1908ஆம் ஆண்டு நிறைவடைந்தன. சுமார் ரூ.17 லட்சம் செலவில் கட்டப்பட்ட இந்த ரயில் நிலையம் இந்தோ, சராசனிக் கட்டடக் கலை வடிவமைக்கப்பட்டது.

இந்த நிலையத்திலிருந்து புகழ்பெற்ற போட் மெயில் என்ற முதல் ரயில் இயக்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் லட்சக்கணக்கான பயணிகளுக்கு சேவை வழங்கிவரும் எழும்பூர் ரயில் நிலையத்தில் ரூ.842 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு வருகிறது. பாரம்பரிய தோற்றத்தை பாதுகாத்தபடியே உலக தரத்திலான பயணிகள் வசதிகளை உருவாக்கம் பணிகள் நடைபெற்று வருகின்றன. 118வது ஆண்டு விழாவை முன்னிட்டு நேற்று ரயில் நிலையத்தில் ரயில்வே அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் முன்னிலையில் கேக் வெட்டி கொண்டாடினர்.

# பெண்ணிடம் அத்துமீறிய த.வெ.க. நிர்வாகி: அண்ணாமலை கண்டனம்



சென்னை, ஜூன்.13–

கணவனை இழந்த பெண் ஒருவரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து ஆலந்தூர் வடக்கு பகுதி தவெக செயலாளர் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ள செய்தி அதிர்ச்சி அளிக்கிறது என்று அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார்.

பெண்களின் பாதுகாப்பை குறித்து முதலமைச்சர் விஜயின் வாக்குறுதிக்கு நேர்மாறாக உண்மை நிலை இருப்பது மிகுந்த ஏமாற்றமளிக்கிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் எதுவும் குறையவில்லை. இது போன்ற கடுமையான குற்றங்களில் ஈடுபடும் தைரியம், இவர்களுக்கு எங்கிருந்து வருகிறது என்று அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார். சமூக விரோதச் செயல்பாடுகளுக்கு, அரசியல் அடையாளம் பாதுகாப்பாக இருக் கக்கூடாது என்பதை, முதலமைச்சர் உறுதி செய்ய வேண்டும். குற்றவாளி மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார் .

# அரசு நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முன்னுரிமை கோரி வழக்கு: மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு



சென்னை, ஜூன்.13–

தமிழகத்தில், அரசு நிகழ்ச்சிகளை தமிழ்த்தாய் வாழ்த்து பாடி துவங்குவதை உறுதி செய்ய உரிய நிர்வாக உத்தரவுகளை பிறப்பிக்கக் கோரிய வழக்கில் பதிலளிக்க, மத்திய மாநில அரசுகள் பதிலளிக்கும்படி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் முதல்வர் விஜய் மற்றும் அமைச்சரவை பதவியேற்பு நிகழ்ச்சி மே 10ம் தேதி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் முதலில் வந்தே மாதரமும், தேசிய கீதமும் பாடப்பட்டு, மூன்றாவதாக தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது, தமிழக மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், அரசு நிகழ்ச்சிகளை தமிழ்த் தாய் வாழத்து பாடி துவங்குவதை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிடக் கோரி சென்னையை சேர்ந்த அனன்யா ராதா கிருஷ்ணன் உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அதில், “தமிழ்நாட்டில் அரசு நிகழ்ச்சிகள், தமிழ்த் தாய் வாழ்த்து பாடி துவங்கப்படுவதும், தேசிய கீதம் இசைத்து நிறைவு செய்வதும் பல ஆண்டுகளாக மரபாக பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த நடைமுறையை நீர்த்துப் போகச் செய்யும் வகையில், அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரமும், தேசிய கீதமும் பாடப்பட்ட பிறகே, தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்படுவதாக குற்றமசாட்டியுள்ளார்.

மேலும், அரசு நிகழ்ச்சியை வந்தே மாதரம் பாடியே துவங்க வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த ஜனவரி 28ம் தேதி பிறப்பித்து சுற்றிக்கையில், மாநில பாடலை பாடி அரசு நிகழ்ச்சியை துவங்க எந்தத் தடையையும் விதிக்கவில்லை; தமிழ்த் தாய் வாழ்த்து பாடுவது வெறும் சடங்கு அல்ல; அது தமிழர்களின் உணர்வு, கலாச்சாரம் மற்றும் அடையாளமாக உள்ளது என, மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வந்தே மாதரம் பாடலை முதலில் பாட வலியுறுத்தி, மத்திய அரசு பிறப்பித்த சுற்றறிக்கையை ரத்து செய்ய வேண்டும்; எதிர்காலத்தில் அரசு நிகழ்ச்சிகளில் இந்த கலாச்சார மோதலை தவிர்க்கும் வகையில், தமிழ்த் தாய் வாழ்த்தை முதலில் பாடுவதற்கு தகுந்த நிர்வாக அறிவுறுத்தல்களை பிறப்பிக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும்” என மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் அடங்கிய அமர்வு, இந்த வழக்கில் மத்திய மாநில அரசுகள் எட்டு வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டது.

# “தவெக பெண் தொண்டர் பாலியல் வன்கொடுமை வழக்கில் ஸ்ரீவைகுண்டம் எம்எல்ஏவை விசாரிக்காதது ஏன்?” - கீதா ஜீவன்




தூத்துக்குடி, ஜூன்.13–

தமிழகத்தில் நடைபெறும் ரீல்ஸ் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது என முன்னாள் அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான பி.கீதாஜீவன் தெரிவித்தார்.

தூத்துக்குடியில் நேற்று செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி: தமிழக முதல்வர் தொடங்கி வைத்த சிங்கப்பெண் பாதுகாப்பு படை என்பது முந்தைய திமுக ஆட்சியில் சிறப்பாக செயல்பட்ட பிங்க் ரோந்து காவல் பிரிவு தான். அதன் பெயரை மாற்றி தற்போது தொடங்கி வைத்துள்ளனர்.

பெண்கள் பாதுகாப்பு குறித்து பேசும் முதல்வர் காதுகளுக்கு, ஸ்ரீவைகுண்டத்தை சேர்ந்த அவரது கட்சி பெண் தொண்டர் கடந்த 15 நாட்களாக கதறி வருவது கேட்கவில்லையா? கட்சி நிர்வாகிகளே தன்னை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாக அந்த பெண் பொதுவெளியில் பகிரங்கமாக தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஸ்ரீவைகுண்டம் தவெக எம்எல்ஏ பெயரை அந்த பெண் குறிப்பிட்டும், அவரிடம் எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை.

ஆனால், சினிமாவுக்கு முன்னோட்டமாக ஆடியோ வெளியீடு போல ஒரு விழாவை நடத்தியிருக்கிறார்கள். தமிழகத்தில் தவெக ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து அக்கட்சியினர் தொடர்ந்து பொய் செய்திகளை சமூக வலைதளங்களில் பரப்பி வருகின்றனர்.

குறிப்பாக திமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தான் நடந்தது போல பரப்புகின்றனர். தமிழக முதல்வர் தனிமனித ஒழுக்கம், சமூக ஒழுக்கம் குறித்து இப்போது பேசுகிறார்.

இதன் மூலம் பொறுப்பில் இருந்து கைநழுவ நினைக்கிறாரா? சென்னை சிறுமி கொலை, ஸ்ரீவைகுண்டம் பெண் பாலியல் வன்கொடுமை சம்பவங்களுக்கு இந்த அரசு பொறுப்பேற்க வேண்டும். ஸ்ரீவைகுண்டம் எம்எல்ஏவிடம் உரிய விசாரணை நடத்த வேண்டும்.

தமிழகத்தில் தவெகவினர் மிரட்டல், கட்டாய வசூல் போன்ற அடாவடி செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஆட்சியில் அமைச்சர்களின் ஆய்வுக் கூட்டம் தொடங்கி அனைத்தும் ரீல்ஸ் மயமாகி விட்டது. சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள் அதிகரித்துவிட்டன.

தமிழகத்தில் மின் தட்டுப்பாட்டுக்கு நிர்வாக சீர்கேடு தான் காரணம். ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் லாட்டரி மீண்டும் நடைமுறைக்கு வந்துவிடுவோம் என்ற அச்சம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

அப்போது திமுக மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மகளிரணி மாவட்ட அமைப்பாளர் கவிதா தேவி, மாநகர அமைப்பாளர் ஜெயகனி, தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட அமைப்பாளர் அபிராமிநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# கள்ளர் பள்ளி ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வுக்கு புதிய வழிகாட்டு நெறிமுறைகள்



சென்னை, ஜூன்.13–

கள்ளர் சீரமைப்பு பள்ளி ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வுக்கு புதிய வழிகாட்டு நெறிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. கலந்தாய்வின்போது பாதிக்கப்படும் ஆசிரியர்கள் மேல்முறையீடு செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் செயலர் வ.தட்சிணாமூர்த்தி வெளியிட்டுள்ள அரசாணை: கள்ளர் சீரமைப்பு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் மற்றும் காப்பாளர்களுக்கு 202627ம் கல்வியாண்டில் பொது மாறுதல் வழங்கும் கலந்தாய்வுக்கான புதிய வழிகாட்டு நெறிமுறைகளை நிர்ணயித்து அரசு ஆணையிட்டுள்ளது.

அதன்படி, ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் கலந்தாய்வு நடைபெறக்கூடிய நாளுக்கு முந்தைய கல்வியாண்டின் ஆகஸ்ட் 1ம் தேதி நிலவரப்படி ‘எமிஸ்’ இணையதளத்தில் உள்ள மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆசிரியர்மாணவர் விகிதாசாரத்தின்படி ஆசிரியர் பணியிடம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

கள்ளர் பள்ளிகளில் ஆசிரியர்களாக பணியாற்றிவருவோர் பணிமூப்பு மற்றும் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் கள்ளர் விடுதியின் காப்பாளர் அல்லது காப்பாளினியாக பணி அமர்த்தப்பட வேண்டும்.

பணிநிரவலில் ஆசிரியர் இல்லாமல் உபரியாக உள்ள காலிப்பணியிடங்களை பிசி, எம்பிசி நல ஆணையரின் தொகுப்புக்கு கொண்டுசெல்ல வேண்டும். அப்பணியிடங்களுக்கு மாறுதல் வழங்கக் கூடாது. உபரி ஆசிரியர் பணியிடங்களுக்கு பணிநிரவல் செய்த பின்னரே பணி மாறுதல் மற்றும் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

மாறுதல் கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்களின் பெயர், கேட்கும் இடம் ஆகிய விவரங்கள் எமிஸ் இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டும். மனமொத்த மாறுதலை பொருத்தவரை, பொது மாறுதல் கலந்தாய்வு நாளன்று மாறுதல் ஆணைகள் வழங்கப்பட வேண்டும்.

ஏற்கெனவே மனமொத்த மாறுதல் அடிப்படையில் மாறுதல் ஆணை பெற்றவர்களை 2 ஆண்டுகளுக்கு பொது மாறுதல் கலந்தாய்வில் பங்கேற்க அனுமதிக்கக் கூடாது.

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமும், சிறப்புத்தேர்வு மற்றும் நேரடி நியமனம் மூலமும் முறையாக நியமிக்கப்பட்டு பணியாற்றி வரும் அனைத்து ஆசிரியர்களும் பொது மாறுதல் கலந்தாய்வில் பங்கேற்கலாம்.

கலந்தாய்வின்போது பாதிக்கப்பட்ட எந்தவொரு ஆசிரியரும் அந்த பணி முடிந்த 3 நாட்களுக்குள் உயர் அதிகாரிக்கு எழுத்துப்பூர்வமாக மேல்முறையீடு செய்யலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காவிரி பாசன மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதிகளாக அரசு அறிவிக்க அன்புமணி கோரிக்கை

சென்னை, ஜூன்.13–

“காவிரி பாசன மாவட்டங்களில் குறைந்தபட்ச அளவிலாவது குறுவை நெல் சாகுபடி செய்யப்படுவதையும், விவசாயிகளின் வாழ் வாதாரம் பாதுகாக்கப்படுவதையும் தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்” என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: “காவிரி பாசன மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக கடந்த சில ஆண்டுகளாக மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டு வந்த நிலையில், நடப்பாண்டில் காவிரியில் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் குறுவை சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சூழலில், அதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை சரி செய்வதற்கான மாற்றுத் திட்டங்களை தமிழக அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை உள்ளிட்ட காவிரி பாசன மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடிக்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து காவிரியில் தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். கடந்த 2020ம் ஆண்டு முதல் 2025ம் ஆண்டு வரையிலான காலங்களில் 2024ம் ஆண்டைத் தவிர மீதமுள்ள அனைத்து ஆண்டுகளிலும் மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12ம் நாள் தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் காவிரி பாசன மாவட்டங்களில் குறுவை பாசனப் பரப்பு படிப்படியாக அதிகரித்து கடந்த ஆண்டில் மொத்தம் 6.31 லட்சம் ஏக்கர் என்ற உச்சத்தை எட்டியது.

நடப்பாண்டில் குறுவை சாகுபடி பரப்பு மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மேட்டூர் அணையின் நீர் இருப்பு அணையின் மொத்தக் கொள்ளளவான 93.47 டி.எம்.சியில் பாதிக்கும் குறைவாக 41.64 டி.எம்.சி மட்டுமே இருப்பதால் மேட்டூர் அணையில் இருந்து இன்று தண்ணீர் திறக்கப்படவில்லை. காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடகத்தில் கட்டப்பட்டுள்ள கிருஷ்ணராஜ சாகர், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி ஆகிய 4 அணைகளிலும் சேர்த்து அவற்றின் மொத்தக் கொள்ளளவில் 29 % மட்டுமே தண்ணீர் உள்ளது. 4 அணைகளுக்கும் சேர்த்து மொத்தமாக வினாடிக்கு 3,395 கன அடி மட்டுமே தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

மே மாத மத்தியில் அந்தமான் நிகோபார் தீவுகளிலும், ஜூன் 4ம் தேதி கேரளத்திலும் பெய்யத் தொடங்கிய தென் மேற்கு பருவ மழை தொடர்ந்து முன்னேறாமல் முடங்கி விட்டது. அடுத்த இரு வாரங்களுக்கு தென் மேற்கு பருவ மழை கேரளம் மற்றும் கர்நாடகத்தில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்வதற்கு வாய்ப்பில்லை என்று கூறப்பட்டுள்ளது. இதையெல்லாம் வைத்துக் கணக்கிட்டால் ஆகஸ்ட் மாத பின் பகுதிக்கு முன்பாக கர்நாடகத்தில் உள்ள அணைகள் நிரம்பி, தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கப்பட வாய்ப்பு இல்லை. அதனால், குறுவை சாகுபடியை கிட்டத்தட்ட கைவிட்டாக வேண்டிய நிலைக்கு உழவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.



காவிரியில் தண்ணீர் திறக்கப்படாத நிலையில், நிலத்தடி நீரை நம்பி காவிரி பாசன மாவட்டங்களின் சில பகுதிகளில் குறுவை சாகுபடி பணிகளை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். அதனால், காவிரி டெல்டாவில் குறைந்தது 3.50 லட்சம் ஏக்கர் பரப்பளவிலாவது குறுவை சாகுபடி நடை பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கடந்த சில வாரங்களாக தடையற்ற மும்முனை மின்சாரம் வழங்கப்படாததால் நெற்பயிர்கள் கருகத் தொடங்கியுள்ளன. தடையற்ற மும்முனை மின்சாரத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படாத நிலையில் காவிரி பாசன மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க அளவில் குறுவை பருவ நெல் சாகுபடி செய்யப்பட வாய்ப்பில்லை.

காவிரி பாசன மாவட்டங்களில் குறுவை சாகுபடி போதிய அளவில் செய்யப்படாததால் மட்டும் ரூ.2,000 கோடி அளவுக்கு உற்பத்தி இழப்பு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி. லட்சக்கணக்கான வேளாண் தொழிலாளர்கள் இதனால் வேலை இழப்பார்கள். ஏற்கனவே உரவிலை உயர்வு, போதிய கொள்முதல் விலை கிடைக்காமை, பயிர்க்கடன் தள்ளுபடி ஏமாற்றம் போன்றவற்றால் காவிரி பாசன மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறுவை பருவ சாகுபடி வெற்றிகரமாக செய்யப்பட்டால், அவர்களுக்கு ஓரளவாவது வருவாய் கிடைக்கும். அதன் மூலம் அவர்கள் கடன் தொல்லையில் இருந்து ஓரளவு மீண்டு வர முடியும்.

இந்த நெருக்கடியான சூழலில் இருந்து விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காக.......: காவிரி பாசன மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவிக்க வேண்டும். மத்திய அரசிடம் நிதி உதவி பெற்று விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டும்.

மாநில அரசு அதிகாரிகள், வானிலை ஆய்வு மைய அதிகாரிகள், விவசாயிகள் ஆகியோர் பங்கேற்கும் முத்தரப்பு பேச்சுகளுக்கு ஏற்பாடு செய்து இப்போதுள்ள சூழலில் உழவர்கள் குறுகிய கால பயிர்களை சாகுபடி செய்யலாமா ? என்பது குறித்து ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

பாமக தொடர்ந்து வலியுறுத்தி வருவதைப் போல, ரூ.5,000 இடுபொருள் மானியத்துடன் குறுவைத் தொகுப்புத் திட்டத்தை அறிவிக்க வேண்டும்.

இவை அனைத்துக்கும் மேலாக குறைந்தது 3 லட்சம் முதல் 4 லட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்படுவதை உறுதி செய்ய தடையற்ற மும்முனை மின்சாரத்தை தொடர்ந்து வழங்க வேண்டும்.

மேற்கண்ட நடவடிக்கைகளின் வாயிலாக காவிரி பாசன மாவட்டங்களில் குறைந்தபட்ச அளவிலாவது குறுவை நெல் சாகுபடி செய்யப்படுவதையும், விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுவதையும் தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்” என்று அன்புமணி கூறியுள்ளார்.

# ஜூன் 24ல் மாநகராட்சி மாமன்றக் கூட்டம்: ஆட்சி மாற்றத்துக்கு பிறகு முதல்முறையாக நடக்கிறது



சென்னை, ஜூன்.13–

மாநகராட்சி மாமன்றக் கூட்டம், 3 மாதங்களுக்கு பிறகு வரும் 24ம் தேதி நடைபெறுகிறது. சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டம், மாதம் தோறும் நடைபெறுவது வழக்கம்.

இதில், சென்னை மாநகரப் பகுதியில் செயல்படுத்த உள்ள திட்டங்களுக்கான அனுமதி, முக்கிய திட்டங்களுக்கு அரசின் அனுமதி கோருவது, அரசின் முக்கிய அரசாணைகளை மாநகராட்சியில் செயல்படுத்த அனுமதி கோருவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

வார்டுகளில் உள்ள பிரச்சினைகள் குறித்து கவுன்சிலர்கள் பேசுவார்கள். அதற்கு மேயர் மற்றும் அதிகாரிகள் பதில் அளிப்பார்கள். இந்த கூட்டம் கடைசியாக கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்றது. அப்போது மாநகராட்சி பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மார்ச் மாதம் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதால், 2 மாதங்களாக மாமன்றக் கூட்டம் நடைபெறவில்லை. தேர்தல் முடிந்து தவெக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நிலையில், கடந்த மே மாதத்திலும் மாமன்றக் கூட்டம் நடைபெறவில்லை.

மாநகராட்சியின் 200 கவுன்சிலர்களில் 152 பேர் திமுகவை சேர்ந்தவர்களாகவே உள்ளனர். சென்னை மாவட்டத்தில் உள்ள 22 சட்டப்பேரவைத் தொகுதிகளில், 20ல் தொகுதிகளில் தவெக எம்எல்ஏக்களே வெற்றி பெற்றுள்ளனர் புதிய ஆட்சி அமைந்த பிறகு, முதல்வர் விஜய்யை, மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் மரியாதை நிமித்தமாக சந்திக்கவில்லை என்ற சர்ச்சை இருந்து வருகிறது.

புதிய அரசின் அனுமதியில்லாததால், மாமன்றக் கூட்டம் நடைபெறவில்லை என்றும் கூறப்பட்டது. இந்நிலையில், இம்மாதம் 24ம் தேதி காலை 10 மணிக்கு மாமன்ற கூட்டம் நடைபெற உள்ளது.

தவெக தலைமையில் புதிய ஆட்சி அமைந்த பிறகு நடைபெறும் கூட்டம் என்பதால், இக்கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

தமிழகத்தின் பல்வேறு உள்ளாட்சிகளில் நடைபெற்ற மன்ற கூட்டங்களில், தவெக எம்எல்ஏக்கள், கட்சி நிர்வாகிகள் பங்கேற்றதால், திமுக மற்றும் தவெகவினர் இடையே மோதல் போக்கு நிலவி வரும் நிலையில், இந்த மாமன்ற கூட்டத்தில், சுவாரஸ்யங்களுக்கு பஞ்சம் இருக்காது என மாநகராட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



## தமிழ்நாட்டில் காலியாக உள்ள 5 தொகுதிகளுக்கு ஆகஸ்டில் இடைத்தேர்தல்? முன்னேற்பாடு பணிகள் தீவிரம்

சென்னை, ஜூன்.13–

தமிழ்நாட்டில் காலியாக உள்ள 5 தொகுதிகளுக்கு ஆகஸ்ட் மாதத்தில் இடைத்தேர்தல் நடைபெற்ற உள்ளதாக தேர்தலில் ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் நடைபெற்ற 17வது சட்டப்பேரவை தேர்தலில் த.வெ.க. அதிக தொகுதிகளில் வெற்றி பெற்றது. எனினும், தனிப்பெரும்பான்மைக்கு தேவையான இடங்கள் கிடைக்காததால், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியவற்றின் ஆதரவுடன் த.வெ.க. ஆட்சி அமைத்தது. தொடர்ந்து, விஜய் முதலமைச்சராக பதவியேற்றார்.

திருச்சி கிழக்கு மற்றும் பெரம்பூர் ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்த விஜய், பின்னர் திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, அ.தி.மு.க.வை சேர்ந்த எஸ்.ஜெயகுமார், மரகதம் குமரவேல், பி.சத்யபாமா, இசக்கி சுப்பையா ஆகியோர் தங்களது சட்டப்பேரவை உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்தனர்.

இதன் காரணமாக திருச்சி கிழக்கு, பெருந்துறை, மதுராந்தகம், தாராபுரம் மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த தொகுதிகளுக்கு வரும் ஆகஸ்ட் மாதத்தில் இடைத்தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளதாக தேர்தல் ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது. இதற்கான முன்னேற்பாட்டு பணிகள் ஆட்சியர் தலைமையில் தீவிரமாக நடந்து வருகிறது.

# லஞ்ச ஒழிப்புத் துறை புதிய மனு: முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்துக்கு சிக்கல்?

சென்னை, ஜூன்.13–

முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்துக்கு எதிரான லஞ்ச வழக்கை முடித்து வைப்பதாக தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையை திரும்பப் பெற அனுமதிக் கோரி லஞ்ச ஒழிப்புத் துறை சார்பில் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2011 முதல் 2016 வரையிலான அதிமுக ஆட்சி காலத்தில், வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்த வைத்திலிங்கம், சென்னை பெருங்களத்தூர் ஸ்ரீராம் ப்ராப்பர்ட்டீஸ் அடுக்குமாடி கட்டிடத்திற்கு திட்ட அனுமதி அளிக்க 28 கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதாக அறப்போர் இயக்கம் சார்பில் கடந்த 2022ஆம் ஆண்டு லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் அளிக்கப்பட்டது.

இரண்டு ஆண்டுகள் தாமதத்திற்கு பிறகு, இந்தப் புகாரின் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் லஞ்ச ஒழிப்புத் துறை, வழக்குப் பதிவு செய்தது. இந்த வழக்கின் அடிப்படையில் அமலாக்கப் பிரிவும் வழக்குப் பதிவு செய்திருந்தது. இந்த வழக்கு சென்னை அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம், கடந்த ஜனவரி மாதம் திமுகவில் இணைந்தார். இதைத் தொடர்ந்து, வைத்திலிங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என்பதால், வழக்கை முடித்து வைத்து லஞ்ச ஒழிப்புத் துறை சார்பில் முந்தைய ஆட்சியில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அறப்போர் இயக்கம், அமலாக்கத் துறை தரப்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், தற்போது லஞ்ச ஒழிப்புத் துறை, முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்துக்கு எதிரான வழக்கை மீண்டும் விசாரிக்க இருப்பதாகக் கூறி மனு தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்குகள் அனைத்தும், சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன் விசாரணைக்கு வந்தன.

அப்போது, வழக்கை முடித்து வைக்க எதிர்ப்பு தெரிவித்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அமலாக்கத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு வைத்திலிங்கம் தரப்பில், இந்த வழக்கிற்கும் அமலாக்கத் துறைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிர்ப்பு தெரிவித்து மனு தாக்கல் செய்ய அமலாக்கத் துறைக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. வழக்கு முடித்து வைப்பதாக லஞ்ச ஒழிப்புத் துறை தாக்கல் செய்த அறிக்கையை தங்களுக்கு வழங்க வேண்டுமென மனு தாக்கல் செய்துள்ளதாக அறப்போர் இயக்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, அமலாக்கத் துறையின் மனு விசாரணைக்கு உகந்ததா, இல்லையா என்பது குறித்து முதலில் ஆய்வு செய்யப்படும் என தெரிவித்த நீதிபதி, அனைத்து மனுக்களின் மீதான விசாரணையை ஜூன் மாதம் 29ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# தூத்துக்குடியில் ரூ.7,000 கோடியில் வின்பாஸ்ட் தொழிற்சாலை விரிவாக்கம்: இஸ்கூட்டர், இபஸ் தயாரிக்க முடிவு




சென்னை, ஜூன்.13–

தூத்துக்குடியில் ரூ.7,000 கோடியில் வின்பாஸ்ட் தொழிற்சாலை விரிவாக்கம் செய்யப்படுகிறது. இங்கு, இஸ்கூட்டர், இபஸ் தயாரிக்கப்படும் என்று கூறப்படுகிறது. வியட்நாமை சேர்ந்த முன்னணி மின்சார வாகன தயாரிப்பு நிறுவனம் கடந்த திமுக ஆட்சியில், தூத்துக்குடியில் 114 ஏக்கர் பரப்பளவில் தொழிசாலையை துவங்கியது. இதை அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் 2025 ஆகஸ்ட் மாதம் தொடங்கி வைத்தார். உற்பத்தி தொடங்கிய சில மாதங்களிலேயே இந்த ஆலை 10 ஆயிரமாவது மின்சார காரை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது.

தற்போது மின்சார வாகன தயாரிப்பு நிறுவனமான வின்பாஸ்ட், தூத்துக்குடியில் உள்ள தனது உற்பத்தி ஆலையில் ரூ.7,000 கோடி மதிப்பிலான இரண்டாம் கட்ட விரிவாக்க பணிகளை மேற்கொள்ள சுற்றுச்சூழல் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளது. இந்த விரிவாக்கத்தின் மூலம், வெறும் கார்களை மட்டுமே தயாரித்து வந்த இந்த ஆலை, இனி மின்சார ஸ்கூட்டர்கள் மற்றும் மின்சார பேருந்துகளையும் தயாரிக்கும் ஒரு மாபெரும் ஒருங்கிணைந்த உற்பத்தி மையமாக மாறவுள்ளது.

தூத்துக்குடி துறைமுக நகரில் அமைந்துள்ள தனது 408 ஏக்கர் உற்பத்தி வளாகத்தில், இரண்டாம் கட்ட விரிவாக்கத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதியை இந்நிறுவனம் கோரியுள்ளது. இதுவரை மின்சார கார்களை மட்டுமே தயாரிப்பதற்கான ஆலையாக இருந்த வின்பாஸ்ட் இந்த புதிய விரிவாக்கத்தின் மூலம் கார்கள், இஸ்கூட்டர்கள் மற்றும் இபஸ்களை தயாரிக்கும் மையமாக மாறவுள்ளது.

இதன் மூலம் ஆலையின் ஒட்டுமொத்த உற்பத்தி திறன் ஆண்டுக்கு 2 லட்சம் மின்சார கார்கள், 10 லட்சம் மின்சார ஸ்கூட்டர்கள் மற்றும் 2,000 மின்சார பேருந்துகள் என்ற அளவிற்கு உயர்த்தப்படவுள்ளது. ஏற்கனவே முதற்கட்டமாக ரூ.1,200 கோடி முதலீட்டில் 50,000 கார்கள் தயாரிக்கும் திறனுடன் இந்த ஆலை இயங்கி வரும் நிலையில், ஓராண்டிற்குள்ளாகவே இந்த அடுத்தகட்ட மெகா அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்தியாவில் மின்சார இருசக்கர வாகனங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்திற்கான இபஸ்களின் தேவை கணிசமாக உயர்ந்து வருவதை அறுவடை செய்ய வின்பாஸ்ட் திட்டமிட்டுள்ளது. இந்த புதிய முதலீடு, ஆட்டோமொபைல் துறையில் தமிழ்நாட்டின் ஆதிக்கத்தை உலக அரங்கில் மேலும் உயர்த்தும் எனத் தொழில்துறை வல்லுநர்கள் கருதுகின்றனர்.

இந்தியாவில் மின்சார வாகன புரட்சி என்பது இருசக்கர வாகனங்கள் மூலமாகவே அடிமட்டத்தில் இருந்து வேகமெடுத்து வருகிறது. மொத்த மின்சார வாகன விற்பனையில் பாதிக்கும் மேல் இருசக்கர வாகனங்களே பிடிக்கின்றன. இதனை மனதில் கொண்டே வின்பாஸ்ட் தனது இஸ்கூட்டர் தயாரிப்பை தொடங்குவது குறிப்பிடத்தக்கது.

# தட்கல் திட்டத்தில் இலவச விவசாய மின் இணைப்புக்கு பணம் செலுத்தி 6 மாதமாக காத்திருக்கும் விவசாயிகள்!

தஞ்சாவூர், ஜூன்.13–

தட்கல் திட்டத்தில் இலவச விவசாய மின் இணைப்புக்கு பணம் செலுத்தி 6 மாதங்களாக காத்திருக்கும் விவசாயிகள் உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

மின் வாரியத்தில் 2025–2026ம் ஆண்டுக்கு விரைவு தட்கல் திட்டத்தில், தஞ்சாவூர் மாவட்டத்துக்கு 356 மின் இணைப்புகள் உட்பட தமிழகம் முழுவதும் 10 ஆயிரம் இவலச மின் இணைப்புகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதற்கான அறிவிப்பு 15.12.2025 அன்று வெளியானது.

அறிவிப்பு வெளியான மறுநாளே 10,000 மின் இணைப்புகளுக்கும் விவசாயிகள் விண்ணப்பித்தனர். 5 குதிரைத்திறன் வரை ரூ.2.50 லட்சம், 5 முதல் 7.5 குதிரைத்திறன் வரை ரூ.2.75 லட்சம், 7.5 முதல் 10 குதிரைத்திறன் வரை ரூ.3 லட்சம், 10 முதல் 15 குதிரைத்திறன் வரை ரூ.4 லட்சம் வீதம் விவசாயிகள் பணம் செலுத்தினர்.

பணம் செலுத்தி 6 மாதங்கள் ஆகியும் இதுவரை விவசாயிகள் பலருக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை. இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க டெல்டா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ப.ஜெகதீசன் கூறியது: ஆற்றில் நீர் வரத்தில் அவ்வப்போது தடை ஏற்படுவதால் பம்புசெட் மூலம் பாசனம் மேற்கொள்ள திட்டமிட்டு, பல லட்ச ரூபாய் செலவில் விவசாயிகள் போர்வெல் அமைத்துள்ளனர்.

இதனிடையே, தட்கல் திட்டத்தில் இலவச மின் இணைப்பு வழங்கப்படும் என மின் வாரியம் அறிவித்தவுடன், விவசாயிகள் வட்டிக்கு கடன் வாங்கி செலுத்தியுள்ளனர். ஆனால், பணம் செலுத்தி 6 மாதங்கள் ஆகியும் இதுவரை மின் இணைப்பு வழங்கப்படாததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தட்கல் திட்ட த்தில் பணம் செலுத்தியவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றார். இதுகுறித்து மின்வாரிய அலுவலர்கள் கூறியது: தட்கல் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் 356 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

கடந்த மாதம் வரை 132 பேருக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய 224 பேருக்கு விரைவில் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றனர்.




■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ் இ.ஆ.ப.,தலைமையில் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலத்துறையின் சார்பில், குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, குழந்தை தொழிலாளர் இல்லாத மாநிலத்தை உருவாக்குவோம் என்ற விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை கையெழுத்திட்டு விழிப்புணர்வு வாகனத்தை துவக்கி வைத்தார். தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்

# தொழில்நுட்பத்துடன் நதியை மீட்டெடுக்க வானில் பறந்த ட்ரோன் : நல்லாறு பாதுகாப்பு இயக்கம் + ரோட்டரி சங்கங்கள் கூட்டு முயற்சி




திருப்பூர் ஜூன்.13-
பாரம்பரியமிக்க நல்லாற்றை மீட்டெடுக்கும் முயற்சியில் வெறும் மனித உழைப்பை மட்டும் நம்பியிருக்காமல், ட்ரோன் போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆற்றின் தலைப்பகுதியிலிருந்து நஞ்சராயன்குளம் பறவைகள் சரணாலயம் வரை முழுமையாகக் கள ஆய்வு நடத்தியிருப்பது நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தின் அதிநவீனப் பாய்ச்சலையும், தீர்க்கமான திட்டமிடலையும் காட்டுகிறது. சர்வதேசப் புகழ்பெற்ற நஞ்சராயன்குளம் பறவைகள் சரணாலயத்தின் உயிர்நாடியே இந்த நல்லாறுதான் என்ற யதார்த்தத்தை உணர்ந்து களமிறங்கியிருப்பது பாராட்டுக்குரியது.

கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் நல்லாற்றை மீட்டெடுக்கும் பணிகளின் அடுத்தகட்டமாக நல்லாறு பாதுகாப்பு இயக்கம், நவீன தொழில்நுட்ப வசதியுடன் ட்ரோன் மூலமாக ஆற்றின் முழுப் பாதையையும் ஆய்வு செய்யும் பணிகளை மேற்கொண்டது.

நல்லாறு பாதுகாப்பு இயக்கம் மற்றும் அன்னூர், திருப்பூர், அவிநாசி, கருவலூர் ரோட்டரி சங்கங்களின் மெகா கூட்டணி சார்பில் நடைபெற்ற இக்கள ஆய்வில், நல்லாற்றின் தலைப்பகுதியிலிருந்து தொடங்கி, புகழ்பெற்ற பறவைகள் சரணாலயமாகத் திகழும் நஞ்சராயன்குளம் வரை உள்ள ஒட்டுமொத்த நதியின் பாதையும் ட்ரோன் கேமராக்கள் மூலமாக மிகத் துல்லியமாக ஆய்வு செய்யப்பட்டது.
ஆற்றின் நீர்வரத்துத் தடங்கள், ஆக்கிரமிப்புகள் மற்றும் புதர் மண்டிய பகுதிகள் அனைத்தையும் வானில் இருந்து படம் பிடித்துக் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இந்த அதிரடி ஆய்வின் மூலம், நல்லாற்றை முழுமையாகச் சீரமைத்து நஞ்சராயன்குளம் பறவைகள் சரணாலயத்திற்குத் தங்குதடையின்றி நீர் சென்று சேருவதற்கான அனைத்துத் தரவுகளும் சேகரிக்கப்பட்டு, புத்துயிர்ப்புப் பணிகளை விரைவுபடுத்துவது என்பது உட்படப் பல்வேறு முக்கியத் திட்டங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

எனினும், மாவட்ட நிர்வாகமும், பொதுப்பணித்துறையும் தரவுகளின் அடிப்படையில் உடனடியாக நதிக்கு வழிவிட வேண்டும் என்பதே இப்பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கூற்றாக உள்ளது.



# சுப்ரீம் மொபைல்ஸ் எலக்ட்ரானிக்ஸ் பர்னிச்சர் ஷோரூம் திறப்பு விழா

சேலம், ஜூன்.13-
சேலம் புதிய பேருந்து நிலையம் எதிரில் சுப்ரீம் மொபைல்ஸ், எலக்ட்ரானிக்ஸ், பர்னிச்சர் ஷோரூம் புதிய கடையினை சுப்ரீம் நிறுவனத்தின் சேர்மன் வெள்ளிக்கிழமையன்று ராதாகிருஷ்ணன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். புதிதாக திறக்கப்பட்ட ஷோரூமில் பல நிறுவன மொபைல் போன்கள், எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள், பர்னிச்சர் பொருட்கள் என அனைத்தையும் உள்ளடக்கிய வகையில் 50000 சதுர அடியில் பிரம்மாண்டமாக அமைந்துள்ளது. இங்கு எண்ணற்ற பொருட்களும் வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையில் சிறந்த தரமான வகையில் அனைத்து பொருட்களும் வாங்குவதற்கு சிறந்த கடையாக உள்ளது. மேலும் பல்வேறு வகையான உபகரணங்களும் ஒரே இடத்தில் வாங்குவதற்கு சிறந்த கடையாக சுப்ரீம் உள்ளதாக பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.



# தென்காசியில் முஸ்லிம் லீக் தலைவர்களுக்குத் தவெகவினர் பிரம்மாண்ட வரவேற்பு

தென்காசி ஜூன்.13-
தென்காசி மாவட்டத்திற்குப் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலத் தலைவர் காதர் மொகிதீன், பொதுச் செயலாளர் முகமது அபூபக்கர் மற்றும் ராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி ஆகியோருக்குத் தமிழக வெற்றிக் கழகம் மற்றும் முஸ்லிம் லீக் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.
தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் மாரியப்பன் அறிவுறுத்தலின்படி, தவெக தெற்கு நகரச் செயலாளர் எஸ்.வி.எம். கண்ணன், வடக்கு நகரச் செயலாளர் சிவ கணேஷ், இந்திய முஸ்லிம் லீக் நகரச் செயலாளர் ஷேக் மைதீன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஜான்சன் துரை மற்றும் சௌந்தர பாண்டியன் ஆகியோர் இணைந்து இந்த வரவேற்பு நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.
இந்நிகழ்வில் தவெக இணைச் செயலாளர் மா.தீபா, பொருளாளர் செல்வன், துணைச் செயலாளர்கள் பாலமுருகன், ஆனந்த் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் குரு ராஜ், ஹக்கீம் செரீஃப், கோரஸ் பாபு, ரகுமத்துல்லா, சாதிக்குல் அமீன், செந்தில் முருகன், மதன் குமார், கிறிஸ்டோபர், ராஜா, முகமது இஸ்மாயில், முருகேஸ்வரி உள்ளிட்ட நகர, ஒன்றிய, மாவட்ட அணி நிர்வாகிகள் பலர் திரளாகக் கலந்துகொண்டனர்.



# தென்காசி கலெக்டரேட்டில் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தின உறுதிமொழி

## ஆட்சியர் தலைமையில் அதிகாரிகள் சபதம்!

தென்காசி ஜூன்.13-
தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், தொழிலாளர் நலத்துறை சார்பில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப வாசிக்க, அரசு அலுவலர்கள் அனைவரும் அதனை ஏற்றுக்கொண்டனர்.
பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர், ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி, இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை எந்தவித பணிகளிலும் ஈடுபடுத்தக் கூடாது என்றும், 15 வயது முதல் 18 வயது வரை உள்ள வளரிளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களில் அமர்த்தக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.
மேலும், பள்ளிக்குச் செல்லும் மாணவர்களை ஊக்குவித்து, குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் அகற்றிடச் சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தி, தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து, குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தின கையெழுத்து இயக்கத்தைத் துவக்கி வைத்த அவர், வாகனங்களில் விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களை ஒட்டினார்.
இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) காளிமுத்து, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திருவள்ளுவன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர் என்பது உட்படப் பல்வேறு விழிப்புணர்வுத் திட்டங்கள் ஒருமனதாக முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.





# திருப்பூர் வெள்ளையங்காடு பகுதியில் லட்சிய ஜனநாயக கட்சியில் மாற்று கட்சியினர் இணைப்பு விழா

திருப்பூர், ஜூன்.13-
லட்சிய ஜனநாயக கட்சி சார்பில் திருப்பூர் வெள்ளையங்காடு பகுதியில் உள்ள தனியார் திருமண மஹாலில் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மாற்று கட்சியினர் இணைப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.
அவரது தலைமையில் தென்னாடு மக்கள் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் செந்தில் வாண்டையார் இந்து மக்கள் கட்சி மாநில செயலாளர் வேலு முருகன் மற்றும் சின்னக்கரை பள்ளிவாசல் அப்பாஸ். தென்னாடு மக்கள் கட்சி மாநில பொருளாளர் காளிமுத்து உள்ளிட்ட 200க்கும் மேற்பட்டோர் லட்சிய ஜனநாயக கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர்.
இணைந்தவர்களுக்கு விரைவில் பொறுப்பு வழங்குவதாக பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா தெரிவித்தார். முன்னதாக வெள்ளையங்காடு நாள் ரோடு சந்திப்பில் கட்சியின் கொடி கம்பத்தில் கொடியேற்றப்பட்டு பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.



# காடையாம்பட்டியில் டிப்பர் லாரி உரிமையாளர்கள் திரண்டு சாலை மறியல்!

ஓமலூர் ஜூன்.13-
சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள காடையாம்பட்டி தாலுகா பகுதியில் டிப்பர் லாரி ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டதால், சேலம் பெங்களூர் தேசிய நெடுஞ் சாலையில் அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
காடையாம்பட்டி தாலுகா பகுதியில் சுமார் 50க்கும் மேற்பட்ட தனியார் கிரஷர்கள் இயங்கி வரும் நிலையில், அங்கிருந்து ஜல்லி, எம் சாண்ட் மற்றும் பி சாண்ட் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு வழக்கமாகத் டிப்பர் லாரிகளில் 4 யூனிட் வீதம் பல்வேறு இடங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டு வந்தன. இந்த நிலையில், தற்போதைய தவெக அரசு டிப்பர் லாரிகளில் இரண்டு யூனிட் மட்டுமே பாரம் ஏற்ற வேண்டும் என உத்தரவிட்டுள்ளதாகக் கூறி, இரண்டு டிப்பர் லாரிகளைச் செம்மாண்டப்பட்டி வருவாய் ஆய்வாளர் பிடித்துத் தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் வழக்கு போடுமாறு புகார் கொடுத்தார்.
|இதனை அறிந்த டிப்பர் லாரி ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்கள் தீவட்டிப்பட்டி என்ற இடத்தில் சேலம் பெங்களூர் தேசிய நெடுஞ் சாலையில் திடீரெனச் சாலை மறியலில் ஈடுபட்ட நிலையில், சம்பவ இடத்திற்கு வந்த காடையாம்பட்டி தாசில்தார், "சேலத்தில் 4 யூனிட் ஏற்றி லாரிகள் ஓடும் போது காடையாம்பட்டிக்கு மட்டும் ஒரு சட்டமா?" எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து, இது குறித்து முழுமையாக விசாரிக்கப்படும் என உறுதி அளித்தார்.
அதன் அடிப்படையில் சாலை மறியல் கைவிடப்பட்டு அனைவரும் கலைந்து சென்றனர் என்பது உட்படப் பல்வேறு விபரங்கள் செய்தியாகத் தொகுக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர் மழையால் கோதையாற்றில் வெள்ளப்பெருக்கு



குமரி, ஜூன்.13-
கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர் மழையால் கோதையாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் கரையோர மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் மலையோரப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக கோதையாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நீர்வரத்து அதிகரிப்பால் பிரசித்தி பெற்ற திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது. ஆற்றின் கரையோரம் செல்வதை தவிர்க்க வேண்டும் என மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

# பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்க: டிடிவி தினகரன்

சென்னை, ஜூன்.13-
பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய அமமுக பொதுச்செயலர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார். விவசாயிகளுக்கு தடையற்ற 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும்; பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்; அறிவிக்கப்படாத மின்வெட்டால் பயிர்களுக்கு உரிய நேரத்தில் நீர் பாய்ச்ச முடியவில்லை என்றும் கூறியுள்ளார்.






SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000